வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-செங்கேணி பழனி

தேதி 11.3.2026 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி தமிழ்நாடு மற்றும் கேரளாவில் இன்று பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடக்கி வைத்தார்.
- நிலையான நீடித்த எதிர்காலத்திற்கு தண்ணீர் பாதுகாப்பு என்பது வாழ்க்கை முறையாக மாற வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.
- உலகிலேயே மிக குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை வழங்கும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
- கரிக்கலாம் பாக்கத்தில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

<u>மோடி</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி திருச்சி பஞ்சப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 5 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களை தொடக்கி வைத்து புதிய திட்டங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். அப்போது உரையாற்றிய அவர் இன்று தொடங்கப்பட்டுள்ள குழாய் மூலம் எரிவாயு வழங்கும் திட்டத்தால் சுமார் 9 லட்சம் குடும்பங்கள்

பயன் அடையும் என்றார். மேலும் இத்திட்டம் 4 கோடி மரங்களை நடுவதற்கு ஈடானது என்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும் தெரிவித்தார்.

மேம்படுத்தப்பட்ட 8 ரயில் நிலையங்களை திறந்து வைத்தும், பிரதம மந்திரியின் கிராம சாலை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 370 கிலோமீட்டர் தூர சாலைகளையும் பிரதமர் திறந்து வைத்தார். நீலகிரி ஈரோடு மாவட்டங்களில் பாரத் பெட்ரோலிய நிறுவனத்தின் எரிவாயு விநியோக வலை அமைப்பு, கங்கை கொண்ட சோழபுரம் முதல் மீன்சுருட்டி சாலை வரையிலான கட்டுமானப் பணிகளுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். முன்னதாக இன்று பிற்பகல் கேரளா சென்ற பிரதமர் அங்கு எர்ணாகுளத்தில் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள பல மேம்பாட்டு திட்டங்களை தொடக்கி வைத்தார். மேலும், பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் கொச்சி சுத்திகரிப்பு நிலையத்தில் 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள பாலிப்ரோப்லின் பிரிவுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். பாலிரோப்லின் உற்பத்தி செய்ய முடியும் மேலும் சாலை உள்கட்டமைப்பு துறைகள் 2 பெரிய நெடுஞ்சாலைத் திட்டங்களையும் பிரதமர் தொடக்கி வைத்தார். இதில் தலப்பாடி செங்கலா தேசிய நெடுஞ்சாலை திட்டமானது 6 வழிப் பாதையாகும். 2650 கோடி ரூபாய்க்கு அதிகமான மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்த நெடுஞ்சாலை பிரிவு மும்பை, கன்னியாகுமரி, பொருளாதார வழித்தடத்தின் ஒரு முக்கிய அங்கமாக திகழ்கிறது. அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட 3 ரயில் நிலையங்களையும் அவர் திறந்து வைத்தார். மேலும் பாலகாடு, பொள்ளாச்சி இடையேயான புதிய ரயில் சேவையையும் பிரதமர் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கொச்சியில் மோடியுடன் விக்சித் கேரளம் என்ற தலைப்பில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டத்தில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற ஜல் மகோத்சவ் 2026- நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது உரையாற்றிய அவர் நீர் பாதுகாப்பு என்பது ஒவ்வொரு குடிமகளின் கடமை என்றும் தெரிவித்தார். தண்ணீரை ஒரு விலை மதிப்பற்ற பொக்கிஷமாக கருதி வருங்கால சந்ததியினருக்கு பயன்படும் வகையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். நிலையான நீடித்த எதிர்காலத்திற்கு தண்ணீர் பாதுகாப்பு என்பது ஒரு நடைமுறையாக மட்டுமல்லாமல் வாழ்க்கை முறையாகவும் மாற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். நல் ஜல் மித்ரா திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு குடிநீர் வழங்கும் அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பில் முக்கிய பங்காற்றும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். இந்த முயற்சி என்பது நீர் பாதுகாப்பிற்கான பங்களிப்பை வழங்குவது மட்டுமல்லாமல் கிராமப் புறங்களில் குறிப்பிடத் தக்க வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் வகையில் அமைந்திருப்பதாக தெரிவித்தார். நீடித்த தண்ணீ பாதுகாப்பை மேற்கொள்வதற்கு சமூகத்தின் அனைத்து பிரிவினரும் பங்களிப்பது அவசியம் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு சி ஆர் பாட்டீல், இணை அமைச்சகர் திரு வி சோமண்ணா, திரு ராஜ்பூஷன் சவுத்ரி ஆகயோரும் கலந்து கொண்டனர்.

<u>அஸ்வினி வைஷ்ணவ்</u>

உலகிலேயே மிக குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை வழங்கும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனைத் தெரிவித்த அவர் உலக அளவில் 1 ஜிபி டேட்டாவிற்கு 2.59

டாலர் கட்டணம் செலுத்தும் நிலையில் இந்தியாவில் இதற்கான கட்டணம் 25 மடங்கு குறைவாக உள்ளது என்றார். கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு டிஜிட்டல் இந்தியா இயக்கத்தை தீவிரமாக செயல்படுத்தி வருவதாக கூறினார். இதன் காரணமாக இணையதள சேவைகள் குறைந்த கட்டணத்தில் அனைவருக்கும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். கடந்த 2014-ஆம் ஆண்டு நாடு முழுவதும் 25 கோடி பேர் இணையதள சேவையை பயன்படுத்தி வந்த நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை 103 கோடியாக அதிகரித்து உள்ளது என்றார்.

<u>ஓம் பிர்லா</u>

மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த விவாதம் இன்று மக்களவையில் மீண்டும் தொடங்கியது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பிஜேபி உறுப்பினர் திரு ரவிசங்கர் பிரசாத் எதிர்கட்சிகளைச் சேர்ந்த சில தலைவர்களை திருப்தி படுத்துவதற்காகவே இத்தீர்மானம் கொண்டு வரப்பட்டிருப்பதாக கூறினார். நாட்டின் அரசியல் சாசனம், நாடாளுமன்றம், மற்றும் தேர்தல் ஆணையத்திற்கு எதிராகவும் எதிர் கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி கருத்துக்களை தெரிவிப்பதாக அவர் குற்றம் சாட்டினார். கடந்த 72 ஆண்டுகளில் மக்களவை தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதம் 2 முறை மட்டுமே நடைபெற்று இருப்பதையும் திரு ரவிசங்கர் பிரசாத் சுட்டிக் காட்டினார். முன்னதாக நேற்று இந்த தீர்மானத்தை முன் மொழிந்த காங்கிரஸ் உறுப்பினர் திரு முகமத் ஜாவத் மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா பாரபட்சமற்ற முறையில் செயல்பட தவறி விட்டதாக குற்றம் சாட்டி இருந்தார்.

## மக்களவை

சமையல் எரிவாயுவின் விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகள் இன்று மக்களவையில் அமளியில் ஈடுபட்டதால் அவை நண்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டது. மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை வைத்து அமளில் ஈடுபட்டனர். அப்போது அவையை நடத்தும் அலுவலர் திரு திலிப் சைக்யா இந்த அமளிக்கிடையே அவையை நடத்த முயன்றார். ஆனால் கூச்சல் குழப்பம் தொடரவே நண்பகல் வரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

## கைலாஷ்நாதன்

புதுச்சேரி அரசின் ஊரக வளர்ச்சி துறை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று கரிக்கலாம் பாக்கத்தில் நடைபெற்றது. தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டு கிராமப்புற சுய உதவிக் குழுப் பெண்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி உதவி, மின்சார ஆட்டோக்கள் மற்றும் லட்சாதிபதி பெண்களுக்கு சான்றிதழ் வழங்கியும் விவசாய களம் மற்றும் தானிய கிடங்குகளை விவசாயிகளுக்கு வழங்கியும் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றிய துணை நிலை ஆளுநர் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தையும் சமுதாய பொருளாதார முன்னேற்றத்தையும் மேம்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு இந்த நிகழ்ச்சியே ஒரு உதாரணம் என்றார். இந்தியாவின் உண்மையான வளர்ச்சி என்பது கிராமங்களின் முன்னேற்றத்தில் தான் இருக்கிறது என்று கூறினார். இந்தியாவின் பலமும் அடையாளமும் கிராமங்களில் தான் இருக்கிறது

என்று பிரதமர் திரு நரேந்திர மோடி எப்பொழுதும் குறிப்பிடுவார் என்றும் அவரது பார்வையில் வெறும் சாலை அமைப்பது அல்லது கட்டிடம் கட்டுவது மட்டும் அல்ல கல்வி, சுகாதாரம், குடிநீர், விவசாய முன்னேற்றம், பெண்களுக்கு அதிகாரம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு என்று எல்லாத் துறைகளிலும் கிராமங்கள் முன்னேற வேண்டும் என்பதே பிரதமரின் நோக்கம் என்றும் பிரதமர் தெரிவித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் சட்டப் பேரவை தலைவர் திரு செல்வம், சட்டப் பேரவை துணைத் தலைவர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு லட்சுமிகாந்தன், திரு செந்தில்குமார், ஊரக வளர்ச்சித் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு கிருஷ்ணமோகன் உப்பு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு மாணிக்க தீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் ஆயிரத்து 604 சுய உதவிக் குழுப் பெண்களுக்கு சமூக முதலீட்டு நிதி மூலம் 7 கோடியே 11 லட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

<u>எண்ணை இருப்பு</u>

நாட்டில் போதுமான அளவு எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக அகில இந்திய வர்த்தக கூட்டமைப்பின் பொது செயலாளரும், பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு பிரவீன் கண்டுடல்வால் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பை உறுதி செய்யும் பொறுப்பு பல்வேறு சங்கங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். சமூக வலைதளங்களில் பரப்ப ப்படும் வதந்திகளை யாரும் நம்ப வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஐ நா வர்த்தக சபை

மேற்கு ஆசியப் பகுதியில் போர் பதற்றம் நிலவுவதால் ஹார்மூஸ் நீரிணையில் கப்பல் போக்கு வரத்து நிறுத்தப்பட்டால் உலக வர்த்தகம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்படக கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தக மேம்பாட்டு அமைப்பு எச்சரித்துள்ளது. இதுதொடர்பாக இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த தடை மூலம் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக் கூடும் என்று தெரிவித்துள்ளது. ஹார்மூஸ் நீரிணை மூடப்பட்டால் உலக அளவில் கச்சா எண்ணெய் இயற்கை எரிவாயு மற்றும் உரங்களின் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் போர்

ஈரானுக்கு எதிரான போரில் அமெக்காவின் வெற்றி தொடர்வதாக அமெரிக்க அமைச்சர் திரு பீட் எக்சேத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஈரானுக்கு எதிரான போர் குறித்து அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் தான் இறுதி முடிவு எடுப்பார் எனக் கூறினார். ஈரானின் ஏவுகணை திறனை முடிவிற்கு கொண்டு வருவது அந்நாட்டின் கடற்படையை அழிப்பது ஈரானில் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை தடுப்பது உள்ளிட்ட 3 இலக்குகளுடன் இந்த போர் தொடங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இதற்கிடையே அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதலை தொடர்ந்து எதிர்கொண்டு வருவதாக ஈரான் நாட்டின் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம் எதுவும் இல்லை என்றும் அணுசக்தியை ஆக்கப்பூர்வமாகவே பயன்படுத்தி வருவதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

## மடகாஸ்கர்

மடகாஸ்கர் நாட்டிற்கு நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் திரு ரத்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் இந்திய விமானப்படை விமானம் மூலம் 12 டன் மருந்து பொருட்கள் 18 டன் பேரிடர் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த நிவாரணப் பொருட்களில் மருந்துகள், மருத்துவ உபகரணங்களுடன் கூடாரங்கள், தண்ணீர் தொட்டிகள் மற்றும் உணவுப் பொருட்களும் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த மாதம் 10-ஆம் தேதி மடகாஸ்கரில் கிழக்கு கடற்கரைப் பகுதியில் 250 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய சூறாவளி காற்று காரணமாக 31 பேர் இறந்துள்ளனர். பலர் காணாமல் போய் உள்ளனர்.

## ஹாக்கி

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று இறுதிப் போட்டி இன்று இரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறுகிறது. இந்தப் போட்டியில் இந்திய அணி வேல்ஸ் அணியை எதிர்கொள்கிறது. பி பிரிவில் 4 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ள இந்தியா வேல்ஸ் அணியை தோற்கடித்தாலோ அல்லது டிரா செய்தாலோ அறை இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை பெறும் என்பது குறிப்பிடத் தக்கது.

கிரிராஜ் சிங்

மத்திய ஜவுளித் துறை அமைச்சரி திரு கிரிராஜ் சிங் இன்று புதுடெல்லியில் பாரத் டெக்ஸ் 2026-ஐ தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் இந்தியா வரும் நாட்களில் இயற்கை இழைகளின் மையமாக உருவெடுக்கும் என்றார். வரும் ஜூலை 14- முதல் 17-ஆம் தேதி வரை டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் பாரத் டெக்ஸ் 2026-ல் 141 நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என்றார். உலகிலேயே அதிக அளவு பருத்தியை இந்தியா மறுசுழற்சி செய்கிறது என்று ஜவுளித் துறையில் அனைத்து நாடுகளும் இந்தியாவை நோக்கியே உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

சர்பானந்த சோனோவால் (9)

கப்பல் கட்டுமான நிதி உதவி கொள்கையின் கீழ் 19 ஆயிரத்து 748 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 456 கப்பல்கள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் இன்று மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார். எழுத்து மூலமாக அவர் அளித்த பதிலில் 204 கப்பல்கள் கட்டுவதற்கு இதுவரை 23 கப்பல் கட்டும் தளங்களுக்கு 620 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தின் தூத்துக்குடி வ உ சிதம்பரனார் துறைமுகத்தில் பல்வேறு விரிவாக்க பணிகளுக்காக 258 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய அமைச்சர் தெரிவித்தார்.